Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 056 | செவ்வாய்க்கிழமை Thursday | 26.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# கடுங்குற்றங்களில் ஈடுபட்டால் கடும் தண்டனை; முதலமைச்சர் விஜய் உத்தரவு



சென்னை,

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை தொடர்பாக முதல்-அமைச்சர் விஜய் இன்று ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் தலைமை செயலாளர், காவல் உயர் அதிகாரிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

இந்நிலையில், கடுங்குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை பெற்றுத்தர அதிகாரிகளுக்கு முதல்-அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில்,

கடுங்குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது துரிதமாக வழக்குப் பதிந்து அதனை விரைவாக விசாரணை செய்தும், வழக்கினை நடத்தியும், கடும் தண்டனை பெற்றுத்தர வேண்டும் என முதல்-அமைச்சர் ச.ஜோசப் விஜய் உத்தரவு.

தமிழ்நாடு முதல்-அமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் இன்று (25.05.2026) தலைமைச் செயலகத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், வழக்கினை விரைவுபடுத்துவது குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும், காவல்துறை, சமூகநலத்துறை மற்றும் அரசு தலைமை வழக்கறிஞருடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதல்-அமைச்சர், பாலியல் குற்ற வழக்கினை விரைவாக நடத்தி, குற்ற வாளிகளுக்கு கடும் தண்டனை பெற்றுத்தர வலியுறுத்தினார்கள். வழக்கினை முறையாக நடத்தி, கடும் தண்டனை பெற்றுத்தருவது குற்றச் செயல்களில் ஈடுபடத் திட்டமிடுவோரைத் தடுக்கும் விதமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் மரியம் பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் டாக்டர் சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) முனைவர் மஹேஷ்வர் தயாள், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு) அனிதாஹுசைன், இ.கா.ப., காவல்துறை தலைவர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு) சி. ராஜேஸ்வரி, இ.கா.ப., காவல்துறை தலைவர் (நுண்ணறிவு) ஆஸ்ரா கர்க், இ.கா.ப., காவல்துறை தலைவர் (சிங்கப்பெண்) கே. பவானீஸ்வரி, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி பிளஸ் 2 மாணவி கொலை வழக்கில் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 12-ஆம் வகுப்புப் பள்ளி மாணவி ஒருவர், கடந்த மார்ச் மாதம் ரீதியாகக் கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பையும், சட்டம்-ஒழுங்கு உள்கட்டமைப்பில் விவாதங்களையும் ஏற்படுத்தியது.

இவ்வழக்கில் தீவிரப் புலனாய்வு மேற்கொண்ட மாவட்டக் காவல் துறையினர், வேடநத்தம் பகுதியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்ற முக்கியக் குற்றவாளியைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். காவல் துறையினரின் விசாரணையில், குற்றவாளி தர்ம முனீஸ்வரன் ஏற்கனவே ஒரு மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்து, படுகொலை செய்த வழக்கில் ரீதியாகக் கைது செய்யப்பட்டுச் சிறையிலிருந்தது தெரியவந்தது.

அந்த வழக்கில் நீதிமன்ற ஜாமீனில் வெளியில் வந்திருந்த நிலையில்தான், மீண்டும் பள்ளி மாணவியைக் குறிவைத்து இத்தகைய கொடூரக் குற்றச் சம்பவத்தில் அவர் ஈடுபட்டுள்ளார் என்பதைப் போலீஸார் ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் நிரூபித்தனர். இவ்வழக்கின் அனைத்துத் தரப்பு விசாரணைகளும், சாட்சிகள் மற்றும் ஆதாரங்கள் சமர்ப்பிக்கும் பணிகளும் தூத்துக்குடி மாவட்டப் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் முழுமையாக நிறைவடைந்தன.

இதனைத் தொடர்ந்து இன்றுகாலைநீதிமன்றம் கூடியவுடன், குற்றவாளி தர்ம முனீஸ்வரன் மீதான கொடூரக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அவரைப் போக்சோ நீதிமன்ற நீதிபதி அதிகாரப்பூர்வமாகக் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தார்.

குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ள தர்ம முனீஸ்வரனுக்கான இறுதித்தண்டனைதீர்ப்பு இன்றுபகல் 1.00மணிக்கு நீதிமன்றத்தில் நீதிபதி பிரீத்தா அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார். குற்றவாளி தர்மமுனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு தண்டனை விதித்து நீதிபதி அதிரடி தீர்ப்பு வழங்கினார். இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞராக எல்லம்மாள் கிஸிங்கர் சிறப்பாக வாதாடினார்.

தொடர் குற்றங்களில் ஈடுபட்டு வந்த நபருக்குக் கடுமையான தண்டனை கிடைக்கப் போகிறது என்பதால் தூத்துக்குடி நீதிமன்ற உள்கட்டமைப்பு வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது.

# 2 வாரத்துக்குள் 4வது முறையாக உயர்ந்த பெட்ரோல், டீசல் விலை



சென்னை:

பெட்ரோல், டீசல் விலை 2 வாரத்துக்குள் 4வதுமுறையாகஉயர்த்தப்பட்டிருக்கிறது. லிட்டருக்கு ரூ. 2.50 அதிகரித்திருக்கிறது.

கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக பெட்ரோல், டீசல் விலையானது தொடர்ந்து உயர்வை சந்தித்து வருகிறது. மே 15ஆம் தேதி பெட்ரோல், டீசல்விலைரூ.3 உயர்ந்த நிலையில், மே 19ஆம் தேதி மீண்டும் 90 பைசா அதிகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மே 23ஆம் தேதி கிட்டத்தட்ட 91 பைசா அதிகரிக்கப்பட்ட நிலையில், இன்று 2 ரூபாய் 50 காசுகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

அதன்படி, மே 25ஆம் தேதியான இன்று சென்னையில் பெட்ரோல் விலை 2 ரூபாய் 46 காசுகள் அதிகரித்து, ஒரு லிட்டர் ரூ. 107.77க்கு விற்பனைசெய்யப்படுகிறது. அதேபோல், டீசல் விலையும் 2 ரூபாய் 57 காசுகள் அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 99.55க்கு விற்பனை செய்யப்படுகிறது.

டெல்லியில்பெட்ரோல் ஒரு லிட்டர் ரூ. 102.12க்கும், டீசல் ஒரு லிட்டர் ரூ. 95.20க்கும் விற்பனைசெய்யப்படுகிறது.

மும்பையில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 111.21க்கும், டீசல் ரூ. 97.83க்கும் விற்பனையாகி வருகிறது. அதேபோல், கொல்கத்தாவில் பெட்ரோல் ரூ. 113.51க்கும், டீசல் ரூ. 99.82க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதன்மூலம், ஒரே நாளில்பெட்ரோல்விலை லிட்டருக்கு ரூ. 2.61 என்ற கணக்கிலும், டீசல்விலை ரூ. 2.71 என்ற கணக்கிலும் உயர்ந்திருக்கிறது.

இந்தியாவில் 2022ஆம் ஆண்டிற்கு பிறகு பெட்ரோல், டீசல் விலையானது பெரிய அளவில் உயர்த்தப்படாமல் இருந்த நிலையில், தற்போது உலகளவில் நிலவி வரும் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக அடுத்தடுத்து விலை உயர்வை சந்தித்து வருகிறது. மே 15ஆம் தேதியிலிருந்து இன்று வரை ஒரு லிட்டருக்கு கிட்டத்தட்ட ரூ. 7.5 அதிகரித்திருக்கிறது.

நமதுநாட்டைபொறுத்தவரை, 90% எரிபொருள் விநியோகத்தை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. தற்போது அமெரிக்கா - ஈரான் இடையே நிலவி வரும் போரின் காரணமாக ஹார்முஸ் நீரிணை வழியாக செல்கிற சரக்கு கப்பல்களுக்கு ஈரான் கட்டணத்தை கணிசமாக உயர்த்தியுள்ளது.

இதன் விளைவாக உலக அளவில் கச்சா எண்ணெய் விலையானது 50 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்திருக்கிறது. இதனால் தற்போது இந்தியாவிலும் பெட்ரோல், டீசல் மற்றும் சி.என்.ஜி விலையானது தொடர்ந்து உயர்வை சந்தித்து வருகிறது.

இந்த விலை உயர்வானது ரூ. 15 வரை இருக்கலாம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# வானிலை முன்னறிவிப்பு: கோவை, சேலம், தேனி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை:

தமிழகத்தில் கோவை, சேலம், தேனி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் நாளை (மே 27) கனமழைபெய்யவாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய கிழக்கு வங்கக்கடல் முதல் தென்கிழக்கு அரபிக்கடல் வரை, தென்மேற்கு வங்கக்கடல், தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளின் வழியாக சுமார் 3.1 கிமீ முதல் 5.8 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை முதல் மே 31-ம் தேதி வரை ஒரிரு இடங்களில்



இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை (மே 26), கோவைமற்றும்திருப்பூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, சேலம், தேனி, திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் 29-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 105 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 88 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 11 செமீ, திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் 9 செமீ, பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளம், திருச்சி மாவட்டம் நந்தியாறில் தலா 7 செமீ, கரூர் மாவட்டம் ஆனைப்பாளையம், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, நீலகிரி மாவட்டம் கெத்தை, சேலம் மாவட்டம் மேட்டூரில் தலா 6 செமீ மழை பதிவாகியுள்ளது.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt





வளைகுடா தமிழ் சங்கம் பொதுச் செயலாளர் முதுவை ஹிதாயத்துல்லாஹ் தனது குடும்பத்தினருடன் 23.5.2026 அன்று ஈரோட்டில் உள்ள தந்தை பெரியார் அறிஞர் அண்ணா நினைவு இல்லத்திற்கு வருகை தந்தார். அவரை ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர் ம. முகமது அர்சத் புத்தகம் வழங்கி உற்சாகமாக வரவேற்றார். பின்னர் அவரும் குடும்பத்தினரும் நினைவு இல்லத்தை முழுமையாக சுற்றிப் பார்த்தனர் நினைவு இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியாருடன் இவரது பேரன் ஆன முன்னாள்மத்தியஅமைச்சரும்,தமிழ்நாடுகாங்கிரஸ்கமிட்டியின்முன்னாள்தலைவருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் இளமைக்கால புகைப்படத்தைக் கண்ட ஹிதாயத்துல்லாஹ் மகிழ்ச்சி அடைந்தார்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் கட்டுமான பணிகளுக்கும் சாலை பணிகளுக்கு தேவையான பாறை பொடி, ஜல்லி போன்றவை கொண்டு செல்லும் கனரக வாகனங்களை சோதனை என்ற பெயரில் இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை நிறுத்தப்படுகிறது இதனால் வாடகை மற்றும் மூலப் பொருட்களின் விலையும் உயர்கிறது இது தவீர்க்கபட வேண்டும், உரிய ஆவணங்கள் வைத்திருக்கும் லாரிகளை காலம் தாழ்த்தாமல் அனுமதிக்கவேண்டும் எனகுமரி மாவட்ட ஆட்சியர் அழகுமீனாவை சந்தித்து திமுக எம்எல்ஏக்கள் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் ஆஸ்டின் ஆகியோர் மனு அளித்தனர்மேலும் கேரளாவிற்கு கனிம வளம் கொண்டு செல்வதை தடுக்க என்ன நடவடிக்கை என செய்தியாளர்கள் கேட்ட நிலையில், கேரளா இந்தியாவில் தான் உள்ளது குமரி மாவட்டம் இந்தியாவில் தான் உள்ளது என தெரிவித்து சென்றார்.

## கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையின் அதிரடி வேட்டையில் 2 கிலோ கஞ்சா பறிமுதல் – இருவர் கைது



கன்னியாகுமரி மாவட்டத்தில் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் உத்தரவின்பேரில் காவல்துறையினர் மாவட்டம் முழுவதும் தீவிர கண்காணிப்பு மற்றும் தொடர் அதிரடிசோதனைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

கஞ்சா,குட்கா,புகையிலை உள்ளிட்ட அரசால் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களின் விற்பனை மற்றும்கடத்தலை முற்றிலும்தடுக்க "போதை இல்லா குமரி" என்ற இலக்குடன் காவல்துறை உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் கன்னியாகுமரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில்காவல்துறையினர்திடீர்சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது சந்தேகத்திற்கிடமாக இருந்த இருவரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில், பாளையங்கோட்டை அண்ணா நகர் பகுதியை சேர்ந்த சங்கர் கணேஷ் என்பவரின் மகன் சுதன் (28) மற்றும் சமாதானபுரம் பகுதியை சேர்ந்த ஜூரம் ராஜ் என்பவரின் மகன் அபினேஷ் (24) ஆகியோர் விற்பனைக்காக கஞ்சா பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

தொடர்ந்து காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையில் அவர்களிடமிருந்து சுமார் 2 கிலோ அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவர்மீதும் கன்னியாகுமரி காவல் நிலைய குற்ற எண் 132/2026 U/S 8 (C) r/w 20(b),(ii),(B),25 NDPS Act கீழ் வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த காவல்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுபவர்கள் மீது எந்தவித தயக்கமும் இன்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பொதுமக்கள் சந்தேகத்திற்கிடமான தகவல்களைஉடனடியாககாவல்துறைக்குதெரிவிக்க வேண்டும் என்றும் காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையின் இந்த தொடர்ச்சியான அதிரடி நடவடிக்கைகள் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதுடன், இளைஞர்களை பாதுகாக்கும் காவல்துறையின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக சமூக ஆர்வலர்கள் பாராட்டியுள்ளனர்.

## ஜபாவுஸ் அமைப்பு மற்றும் ப்ரோஜோன் வணிக வளாகம், இணைந்து நடத்தும் கோவையில் மாபெரும் பெட் கார்னிவல் நிகழ்ச்சி ப்ரோஜோன் வணிக வளாகத்தில் மே மாதம் 23 மற்றும் 24ம் தேதி என ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது



கோவை சரவணம்பட்டி பகுதியில் ப்ரோஜோன் வணிக வளாகம் இயங்கி வருகின்றது. இந்த வணிக வளாகத்தில் கோவையில்மாபெரும்பெட் கார்னிவல் நிகழ்ச்சி நடைபெற்றது. சென்னை, பெங்களூருமற்றும்தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் 100 –க்கும் மேற்பட்ட பலதரபட்ட நாய்களின் கண்காட்சி, பேஷன் ஷோ மேலும் பூனைகள் கண்காட்சி, பறவைகள் கண்காட்சி, வண்ண வண்ண மீன்கள் கண்காட்சி, பல தரப்பட்ட மாடு, ஆடுகள், ஒட்டகம், குதிரைகள் கலந்து கொண்டது இது பார்வையாளர்களை வெகுவாக கலந்து கொண்டது குழந்தைகளிடமும், கோவை மக்களிடையேயும் மிகுந்த வரவேற்பை பெற்றது. மேலும் லைப் கேர் பெட் குழுவினரின் மருத்துவ பரிசோதனைக்கு பிறகு நாய்கள் மற்றும் பூனைகள் கண்காட்சிக்கு அனுமதிக்கப்பட்டது. தொடர்ந்து ஷீமேக்ஸ் கே 9, குழுவினரின் நாய்கள் சாகச நிகழ்ச்சிகளும் பார்வையாளர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது.

மேலும் எஸ்பிசிஏ மூலம் பெட் அசோசியேஷன் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடைபெற்ற இந்த மாபெரும் பெட் கார்னிவல், பலதரப்பட்ட குழந்தைகளை கவரும் வண்ண விளையாட்டுகள் , பேஷன் ஷோ என கோவை மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதாக, ஜபாவுஸ் அமைப்பின் நிறுவனர் உமா மகேஷ்வரன் மற்றும் அவரது குழுவினர் மற்றும் ப்ரோஜோன் வணிக வளாக நிர்வாகத்தின் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆதித்யா தொழில்நுட்பக் கல்லூரியின் 13வது பட்டமளிப்பு விழா



கோவை குரும்பபாளையம் பகுதியில் ஆதித்யா தொழில் நுட்ப கல்லூரியின் 13 வது பட்டமளிப்பு விழா கல்லூரி அரங்கில் நடைபெற்றது..

ஆதித்யா கல்வி குழுமங்களின் தலைவர் பொறியாளர் சுகுமாரன் தலைமையில் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினராக சி.ஐ.இ.எல். நிறுவனத்தின் தலைமை டிஜிட்டல் அதிகாரி நெல்சன் குழந்தைராஜ் கலந்து கொண்டு பொறியியல் பட்டம் முடித்த மாணவர்களுக்கு பட்டம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். முன்னதாக விழாவில் பேசிய அவர்,மாணவர்கள் தங்கள் பெறும் கல்வி அறிவோடு நல்ல பண்புகள் மற்றும் குணங்களை வளர்த்திகொள்ளவேண்டும் எனவும், மேலும் கல்வி அறிவை சமூகத்திற்கு நல்ல பயனுள்ள பங்களிப்பை வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார். தற்போதைய சவாலான தொழில் நுட்ப உலகில் செய்முறை அனுபவம் மாணவர்களுக்கு தொழில்துறைத் திறன்களையும் நடைமுறை அறிவையும் அதிகரிக்க உதவும் என கூறினார். அதோடு ஆதித்யா கல்லூரியில் வழங்கப்படும் பல்வேறு தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சிகளை சரியான முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்... விழாவில் பொறியியல், சிவில், மின்னனு,உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பயின்ற நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.. விழாவில்,ஆதித்யா கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர்கள் பிரவீண் குமார்,ஸ்ரீநிதி பிரவீண் குமார்,இயக்குனர் ஜோசப் வி தனிக்கல்,முதல்வர் டாக்டர் திருமலை,டீன் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர், மின்னணு மற்றும் தொடர்பியல் பொறியியல் துறைத் தலைவர் டாக்டர் ஸ்ரீதேவி, அறிவியல் மற்றும் பொறியியல் துறைத் தலைவர் தீபா ஆகியோர் இந்த நிகழ்வை ஒருங்கிணைத்தனர் .மற்றும் இந்த நிகழ்ச்சியில் பல்வேறு துறைதலைவர்கள்,பேராசிரியர்கள்,ஊழியர்கள், பெற்றோர்கள்,மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



திமுகழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை அவர்களின் தந்தை பொன்னுச்சாமி அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது சொந்த கிராமமான சுப்பையா புரத்தில் அவரது இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள திருஉருவ சிலைக்கு கழக இணைஅமைப்புசெயலாளர்அன்பகம்கலைஅவர்களும்தென்காசிசட்டமன்றஉறுப்பினர் கலை கதிரவன் அவர்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் சட்டமன்றஉறுப்பினர்கலைகதிரவன்அவர்களின்தாயாரும்இணைஅமைப்புசெயலாளர் அவர்களின் துணைவியார் கலைச்செல்வி அவர்கள் உடன் உள்ளனர்

## தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சராக தமிழன் பார்த்திபன் பொறுப்பேற்றதை கொண்டாடும் வகையில் தீவட்டிப்பட்டியில் தமிழக வெற்றி கழக கட்சியினர் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்



சேலம் மாவட்டம் காடையாம்பட்டி அருகே 5 உள்ள தீவட்டிப்பட்டியில் – காடையாம்பட்டி கிழக்கு 5 ஒன்றிய தமிழக வெற்றி கழகம் சார்பில் ஒன்றிய செயலாளர் மணிகண்டன் தலைமையில்தமிழகபோக்குவரத்து – துறை அமைச்சராகதமிழன்பார்த்திபன் பொறுப்பேற்றதை கொண்டாடும் வகையில் பட்டாசுவெடித்துபொதுமக்களுக்கு இனிப்பு கள் வழங்கி கொண்டாடினர் இதில் மாவட்ட துணைச் செயலாளர் P.ராகுல் காந்தி B.sc.cs.,கலந்து கொண்டு பேருந்து நிலையத்தில் இருந்த பேருந்து பயணிகள் பேருந்தில் செல்லும் பயணி கள் ஆட்டோ பயணிகள் உள்ளிட்டவைகளுக்கு இனிப்பு களை வழங்கி கொண்டாடி னர். K.பிரதாப் பேரூர் கழக செயலாளர் காடையாம் பட்டி நிர்வாகிகள் வீரமணி விக்னேஷ் ஏழுமலை காளி யப்பன் சுவின் சரவணன் முரளி, அறிவழகன் காடையாம் பட்டி கிழக்கு ஒன்றிய இணை செயலாளர் அருண் குமார்நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் ஒரு கலந்து கொண்டனர்.



மறைந்த முன்னாள் பிரதமரும், அகில இந்திய காங்கிரஸ் தலைவருமான "பாரத ரத்னா" ராஜீவ் காந்தி அவர்களி '35 ஆம் நினைவு தினத்தில் பதவியேற்ற காங்கிரஸ் அமைச்சர்களுக்காக தென்காசியில் பட்டாசு வெடித்து கொண்டாடிய காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.05.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சிறுசேமிப்புத்துறையின் சார்பில் மாவட்டத்தில் கடந்த நிதியாண்டில் சிறுசேமிப்புத் திட்டங்களில் நகராட்சி மற்றும் வட்டாரங்கள் அளவில் சிறப்பாக பணியாற்றி அதிக முதலீடுகளை திரட்டியுள்ள மகளிர் மற்றும் நிலை முகவர்களின் சாதனைப்பணிகளை பாராட்டி பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றுகள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) விஜய் ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

## நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் இல்லம் தேடி மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் *"இல்லம் தேடி மரக்கன்று, இல்லம் தோறும் மரக்கன்று"* என்ற திட்டத்தின் அடிப்படையில் பொது மக்களுக்கு இலவசமாக அவர்களது இல்லம் தேடிச்சென்று மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது.அதன் தொடர்ச்சியாக இன்று சானார்பாளையத்தில் *தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பாக மரக்கன்று வழங்குதல் மற்றும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு* நடைபெற்றது. நிகழ்விற்கு *தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின்தலைவர்சீனிவாசன் தலைமை வகித்தார். சானார்பாளையம் *ஐஸ்வர்யா நகர்* பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் மரக்கன்று வழங்குதல் மற்றும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வில் அந்தபகுதியை சேர்ந்த *விவேகானந்தன், சிவசண்முகம், பீனா, இளங்கோ, ஞானசேகர்,பிரேம்,தவித் ஆகியோர் மரக்கன்றுகளை பெற்று அவர்களின் இல்லங்கள் அருகில் நட்டனர். நிகழ்வில் *தளிர்விடும் பாரதம் செயலாளர் பிரபு, பொருளாளர் சின்னையன்* உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# முதலமைச்சர் விஜய்யுடன் தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்க நிர்வாகிகள் சந்திப்பு

தமிழக முதல்வரோடு தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்க நிர்வாகிகள் சந்திப்பு விவசாய வேளாண் இடுபொருள்களுக்கு உரிய விலை வேண்டும் தென் மண்டல செயலாளர் அதிபன் மாடசாமி பேட்டி தென்காசி மே 24 தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி ஆர் பாண்டியன் தலைமையில் தென் மண்டல செயலாளர் அதிபன் மாடசாமி மற்றும் நிர்வாகிகள் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் அழைப்பை ஏற்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர் மனுவில் தற்போது தமிழகத்தில் நிலவி வரும் விவசாயிகளுக்கான இடர்பாடுகள் மற்றும் வேளாண் விவசாயிகள் சம்பந்தமான குறைகளை தீர்க்கும் விதம் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும் விவசாயிகளுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென கோரிக்கை மனு அளித்தனர் இது குறித்து தென் மண்டல செயலாளர் தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அதிபன் மாடசாமி அவர்கள் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது

தமிழகம் ஒரு விவசாய மாநிலமாக இருந்தாலும், இன்று விவசாயிகள் பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். காலநிலை மாற்றம், தண்ணீர் பற்றாக்குறை, உரம் மற்றும் விதை விலை உயர்வு, பயிர்களுக்கு சரியான விலை இல்லாமை போன்ற காரணங்களால் விவசாயம் கடினமான தொழிலாக மாறியுள்ளது. இதனால், தமிழக அரசு விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்த பல முக்கிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

முதலாவது, நீர்ப்பாசன வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் மழை குறைவாக இருப்பதால், ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் ஆகியவற்றை சீரமைத்து நீரை சேமிக்கும் திட்டங்களை அரசு விரிவுபடுத்த வேண்டும். சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் மழைநீர் சேகரிப்பு திட்டங்களுக்கு கூடுதல் மானியம் வழங்க வேண்டும். தற்போது தமிழக அரசு விவசாயத்திற்கும் நீர்ப்பாசன விரிவாக்கற்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இரண்டாவது, விவசாயப் பொருட்களுக்கு உறுதியான குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்க வேண்டும். விவசாயிகள் உழைத்து விளைவித்த பயிர்களுக்கு சரியான விலை கிடைக்காததால் கடனில் சிக்கி வருகின்றனர். எனவே நெல், கரும்பு, பருப்பு, காய்கறி போன்ற அனைத்து முக்கிய பயிர்களுக்கும் நியாயமான விலை நிர்ணயித்து அரசு நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும்.

மூன்றாவது, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும். ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் நிலத்தின் வளத்தை குறைக்கின்றன. ஆகவே இயற்கை உரம், பசுமை விவசாயம், நாட்டு விதைகள் போன்றவற்றை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு அரசு சிறப்பு ஊக்கத்தொகை வழங்க வேண்டும். இதனால் மண் வளமும் மனித ஆரோக்கியமும் பாதுகாக்கப்படும்.

நான்காவது, விவசாயக் கடன்களை எளிதாக்க வேண்டும். சிறு மற்றும் குறைந்த நிலம் கொண்ட விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டும். இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யும் திட்டங்களும் அவசியம். ஐந்தாவது, தொழில்நுட்ப உதவிகளை கிராமங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். நவீன விவசாய கருவிகள், செயற்கை நுண்ணறிவு, சந்தை விலை தகவல்கள், நோய் கண்டறிதல் போன்ற தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே ஒவ்வொரு ஊராட்சியிலும் விவசாய ஆலோசனை மையங்கள் உருவாக்கப்பட வேண்டும்

ஆறாவது, இளைஞர்களை விவசாயத்திற்கு ஈர்க்க வேண்டும். இன்று பல இளைஞர்கள் விவசாயத்தை விட்டு நகரங்களுக்கு செல்கின்றனர். விவசாயத்தில் லாபம் கிடைக்கும் வகையில் அரசு திட்டங்களை உருவாக்கி, விவசாய தொழில் முனைவோருக்கு நிதி மற்றும் பயிற்சி வழங்க வேண்டும்.

இறுதியாக, விவசாயிகளுக்கான காப்பீட்டு திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். வெள்ளம்,வறட்சி,புயல் போன்ற இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் முறையை அரசு வலுப்படுத்த வேண்டும்.

முடிவாக, "விவசாயம் நாட்டின் முதுகெலும்பு" என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நீண்டகால திட்டங்களுடன் செயல்பட வேண்டும். விவசாயிகள் முன்னேறினால் மட்டுமே தமிழகத்தின் பொருளாதாரமும் உணவு பாதுகாப்பும் உறுதியாக இருக்கும் என்று தெரிவித்தார் மேலும் தமிழக முதல்வர் விவசாய சங்க பிரதிநிதிகளை அழைத்து நேரம் ஒதுக்கி அனைத்து கோரிக்கைகளையும் கேட்டறிந்து உறுதியான நடவடிக்கை எடுப்பதாக கூறியது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை பை ஏற்படுத்தியது எனவும் தெரிவித்தார்



தென்காசி காசி விஸ்வநாதர் ஆலய முன்பாக காங்கிரஸ் கட்சிமாவட்டத் தலைவர் தலைமையில் அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சி இடம்பெற்ற நிலையில் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்.



தூத்துக்குடி மாவட்டப் புதிய காவல் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்றுள்ள அபிஷேக் குப்தாவை வடக்கு திமுக மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார். தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய எஸ்பியாகப் பொறுப்பேற்றுள்ள அபிஷேக் குப்தாவை இன்று மாவட்டக் காவல் துறை அலுவலகத்தில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னா`ள அமைச்சருமான கீதாஜீவன்,நேரில்சந்தித்து புதிய எஸ்பிக்கு மலர்க்கொத்து வழங்கித்தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்த சந்திப்பின் போது, சட்டமன்ற உறுப்பினர்கள் விளாத்திகுளம் மார்க்கண்டேயன், கோவில்பட்டி கருணாநிதி, திமுக மாநகர செயலாளர் ஆனந்தசேகரன் உள்ளிட்ட பலர் எஸ்பி உடன் இருந்தனர்.

### கோவையில் சிறந்த மேக்கப் கலைஞர்களுக்கான தென்னிந்திய அளவிலான மேக் 2026 எனும் போட்டியில் கலந்து கொண்ட

# மேக்கப் கலைஞர்கள், முதல்பரிசாக ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள நகையை தட்டி சென்றனர்



தமிழகம் உட்பட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மேக்கப் கலைஞர்கள் தங்கள் மாடல்களுடன் மேடையில் அணிவகுப்பு நடத்தி அசத்தினர்.

மேக்கப் மற்றும் ஃபேஷன் துறையில் புதிய திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் கோவையில் மேக் 2026 எனும் மேக்கப் ஆர்டிஸ்ட் போட்டி, ஆடை அலங்கார அணி வகுப்பு மற்றும் ஃபேஷன் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது...

கம்ஃபோர்ட் ஷூட்ஸ் சார்பாக அதன் நிறுவனர் அக்ஷயா தலைமையில் நடைபெற்ற இதில்,தமிழகம் மட்டுமின்றி கேரளா,கர்நாடகா,ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து மேக்கப் துறை சார்ந்த கலைஞர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்..

இந்திய திருமணங்களின் பாரம்பரிய உடைகள் எனும் தலைப்பில் நடைபெற்ற இதில், புடவை,லகங்கா,சோளி போன்ற உடைகளை அணிந்த மாடல் பெண்கள் மணக்கோலத்தில் மேடையில் ராம்ப் வாக் நடந்து அசத்தினர்..

நிகழ்ச்சியில் மாடல்கள், மேக்கப் ஆர்டிஸ்ட்கள், டிசைனர்கள் மற்றும் ஃபேஷன் பிராண்டுகள் கலந்து கொண்டு நவீன மற்றும் பாரம்பரிய ஆடைகளை அறிமுகப்படுத்தினர் இதில் சிறந்த சிகை அலங்காரம்,புதுமை,இயற்கை அலங்காரம் என பல்வேறு பிரிவுகளில் போட்டியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகற் வழங்கப்பட்டன..

இதில் நடுவர்களாக பிரபல அழகியல் நிபுணர்கள் சத்யா,ஷைனி பார்பரா,அகிலாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த மேக்கப் கலைஞர்களை தேர்வு செய்தனர்

போட்டியில் வெற்றி பெறுவோருக்கு ஒருலட்சம் ரூபாய் மதிப்பிலான வைரம் மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட ஆபரணங்கள் பரிசாக வழங்கப்படுவதாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அக்ஷயா தெரிவித்தார்..

மேக்கப் மற்றும் ஃபேஷன் துறையில் புதிய திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி, இளைஞர்கள் மற்றும் ஃபேஷன் துறையினரின் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடதக்கது.

## அகரக்கட்டில்

### சிபா ஆதித்தனாரின் 45 வது ஆண்டு நினைவு நாளில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



அகரக்கட்டில் உள்ள தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் சிபா ஆதித்தனாரின் அவர்களின் 45 வது ஆண்டு நினைவு நாளில் அகரக்கட்டில் உள்ள தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் மாநில கல்வி குழுவின் ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில் சிபா ஆதித்தனார் அவர்களின் திருவுரு வப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் இந்த விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் 10 – 12–ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ மாணவிகளுக்கு சிபா ஆதித்தனார் அவர்களின் நினைவாக பரிசுகள் வழங்கி பேசினார்கள் அவர் பேசும்போது உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு என்று சூளுரைத்தவர் சி பா ஆதித்தனார் 1942 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னரே தனி தமிழ் நாடு வேண்டுமென்று ஆங்கிலேயர்களிடம் கோரிக்கை வைத்தவர் சிபா ஆதித்தனார் உலகின் மூத்த மொழியான தமிழ் மொழி பேசுகின்ற தமிழர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னரே மன்னர்களாக இருந்த தமிழர்கள் கடல் கடந்து பல நாடுகளை கைப்பற்றி ஆட்சி செய்த வீரம் படைத்தவர்கள் தமிழர்கள் என்றும் அதனால் எங்களுக்கு தனி தமிழ் நாடு வேண்டுமென்று கேட்டவர் சிபா ஆதித்தனார் அவர்கள் என்றார் மேலும் சிபா ஆதித்தனார் ஆங்கிலேயர்களிடம் தமிழ் மாநிலம் வேண்டும் என்று கேட்கவில்லை தனி தமிழ் நாடு வேண்டும் என்று கேட்டார் ஏன் என்றால் வீரம் நிறைந்த தமிழர்கள் மொழி மீது பற்று கொண்ட தமிழர்கள் யாரிடமும் அடிபணிந்து நிற்கக்கூடாது என்பதற்காக தனித் தமிழ் நாடு கேட்டார் சிபா ஆதித்தனார் அவர்களின் 45 ஆவது ஆண்டு நினைவு நாளில் அவருக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்துவதில் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு பெருமை கொள்கிறது என்றார் மேலும் சிபா ஆதித்தனார் அவர்களின் 45 வது ஆண்டு நினைவு நாளில் அவர் நினைவாக மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் குருசாமி நாடார் சக்திவேல் கிருஷ்ணமூர்த்தி தவசி செல்வா மற்றும் பலர் கலந்து கொண்டனர்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மாவட்டம் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் பாபுராயன்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் (நிர்வாகம்) விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அரசு ஊழியர் ஐக்கிய பேரவை மாவட்ட நிர்வாகி எஸ். சிவமயம் அவர்களின் ஐம்பதாம் ஆண்டு பொன்விழா பிறந்தநாளில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கேட் வெட்டி இனிப்புகள் வழங்கினார் அதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கு அறுசுவை விருந்து பிரியாணி வழங்கப்பட்டது உடன் கட்சியின் நிர்வாகிகள் தென்காசி சிவா பாக்யராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையை எம்.எல்.ஏ. பார்வையிட்டு கலந்தாய்வு



சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் நேற்று ( சனிக்கிழமை) சிவகங்கையில் உள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு சொந்தமான கிராபைட் தொழிற்சாலையை பார்வையிட்டு அங்குள்ள நிலைபாடுகள் குறித்து பணியாளர்களிடம் பேசினார். தொழிற்சாலையில் பணிபுரியும் அடிப்படை தொழிலாளர்களின் நிலைப்பாடுகளையும் அவர்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். பின்பு அவர் தொழிற்சாலையின் மேலாளர் மற்றும் தொழிற்சாலையின் நிர்வாகிகளுடன் கலந்து ஆய்வு செய்தார். அப்போது தொழிற்சாலையின் மேலாளர் கதிரவன் பேசும் போது : இந்த தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 15 முதல் 18 டன் வரை கிராபைட் எடுக்கிறோம். கடந்த ஆறு மாதமாக சரக்குகள் தேக்கம் இருக்கிறது. இதற்கு டெண்டர் பிரச்சினை தான் காரணம். இந்த தொழிற்சாலைக்கு 238.5 ஹேக்டேர் நிலங்கள் இருப்பதால் போதுமான அளவில் கிராபைட் இருக்கிறது என்றார். அப்போது சிவகங்கை எம்.எல்.ஏ குழந்தைராணி நாச்சியார் பேசும்போது : தொழிற்சாலையின் மேலாளர் என்ற முறையில் உங்கள் உயர் அதிகாரிகளிடம் பேசி டெண்டர் பிரச்சினையை சரி செய்யுங்கள். இங்கு எடுக்கப்படும் கிராபைட் வெளி மாநிலங்களுக்கு கொண்டு போய் அங்கு தொழில்கள் செய்கிறார்கள். இதற்கு மாற்றாக இந்த கிராபைட் தொழிற்சாலையை மையமாக வைத்து அது சார்புடைய தொழில்களையும் உபரி தொழில்களையும் சிவகங்கை மாவட்டத்திலேயே தொடங்க வேண்டும். அப்போதுதான் இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இது குறித்து தமிழகம் முதல்வரிடம் பேசி தீர்வு காண முயற்சி செய்வேன் என்றார்.

# தமிழ்நாடு பனை தொழிலாளர் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொதுதொழிலாளர் சங்கத்தின் வாரிய தலைவராக, இச்சங்கத்தின் மாநில பொதுச் செயலாளரான மாரியப்பனை நியமனம் செய்ய வேண்டி தமிழக முதல்வருக்கு மனு அனுப்பப்பட்டது



தமிழ்நாடு பனைத் தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொது தொழிலாளர் நலவாரிய சங்கத்தின் சார்பாக, தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் கூறுவதாகவும், தமிழ்நாடு பனை தொழிலா அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொது தொழிலாளர்கள் நலவாரிய சங்கத்தின் சார்பாக, மாநிலம் முழுவதும் பனைமரம் வளர்ப்பது,மற்றும் பாதுகாப்பது, குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பல்வேறு நற்பணிகளை செய்து வருகின்றதாகவும்,தமிழகத்தின் தேசிய மரமான பனை மரத்தை பாதுகாக்கும் பொருட்டு, கோவை மாவட்டத்தில் உள்ள 225 கிராம ஊராட்சிகளில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், அமைப்பின் சார்பாகவும், பனைமரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு பனைத் தொழிலாளர் நல வாரியத்திற்கு, தமிழ்நாடு அரசு மூலமாக, வாரிய தலைவர் பதவி நியமனம் செய்யும் பட்சத்தில்,அந்த வாரிய தலைவர் பதவியை, இச்சங்கத்தின் மாநில பொதுச்செயலாளரான, மாரியப்பன் ஆகிய எனக்கு, வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும், வாரியத்தின் மாநில தலைவர் பதவி எனக்கு வழங்கினால் எந்தவித பாரபட்சமும் இன்றி, சிறப்பாக செயல்பட்டு தங்களின் வழியில் பயணிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த கடிதத்தை தமிழக முதல்வருக்கு அவர் அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிட த்தக்கது.

# காட்டுமைலூர் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே உள்ள காட்டுமைலூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மஹாமாரியம்மன் ஆலய நூதன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவையொட்டி ஞாயிற்றுக்கிழமை அன்று மங்களஇசை, வாஸ்து பூஜை, கணபதி வழிபாடு மற்றும் முதல் கால யாக பூஜை ஆரம்பம், திரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை ஆகியவை நடைபெற்றன. தொடர்ந்து திங்கட்கிழமை அன்று இரண்டாம் கால யாக பூஜை, கோ பூஜை, நாடி சந்தானம், தத்வார்ச்சனை, பூர்ணாஹுதி மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன.

பின்னர் முக்கிய நிகழ்வாகமஹாகும்பாபிஷேக விழாவில் கோபுர கலசத்திற்கும், அதனைத் தொடர்ந்து மூல ஸ்தானம் மஹா மாரியம்மனுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு மஹா கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வாணவேடிக்கை மற்றும் கரகாட்டத்துடன் அம்மன் வீதியுலா கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவிற்கான சிறப்பான ஏற்பாடுகளை காட்டுமைலூர் ஊர் பொது மக்கள் செய்திருந்தனர். இந்த விழாவில் சர்வசாதகம் குமார் குருக்கள், ஸ்தபதி கிருஷ்ணமூர்த்தி சிற்பி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தகோடிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து இறையருள் பெற்றனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தின் 36ஆவது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக

# அபிஷேக் குப்தா தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்



தூத்துக்குடி மாவட்ட எஸ்பி ஆக இருந்த மதன் பணியிட மாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட புதிய எஸ் பி யாக அபிஷேக் குப்தா நியமனம் செய்யப்பட்டார்

இதை தொடர்ந்து இன்று பிற்பகல் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தாவிற்கு காவல்துறை சார்பில் அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது இதை தொடர்ந்து காவல்துறை அதிகாரிகள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்த்தாவை வரவேற்றனர் இதை அடுத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறையில் தூத்துக்குடி மாவட்டத்தில் 36 ஆவது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக அபிஷேக் குப்தா பதவி ஏற்றுக்கொண்டார்

# ஸ்டெர்லைட் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு திமுக மாவட்ட செயலாளர் கீதாஜீவன் வீரவணக்கம் செலுத்தினார்



தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு போராட்டத்தில் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த 13பேர் மற்றும் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த இருவர் உள்ளிட்ட உயிர்நீத்த தியாகிகள் 15 பேர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் கலைஞர் அரங்கில் வைக்கப்பட்டிருந்த உயிர்நீத்த 15 பேர் படத்திற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கீதாஜீவன் மலர்தூவி வீரவணக்கம் செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மாநகர செயலாளர் ஆனந்தசேகரன்,மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாவட்டத் துணைச்செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், துணை மேயர் செ.ஜெனிட்டா, மண்டல தலைவர்கள் நிர்மல்ராஜ், கலைச்செல்வி, பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், ராமகிருஷ்ணன், சுரேஷ்குமார், மேகநாதன், பொறியாளர் அணி ஜான்சன், மகளிர் அணி கவிதா தேவி, மாநகர துணைச் செயலாளர் கீதா முருகேசன் மலர் தூவி நினைவு அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், செல்வகுமார், சேர்மபாண்டியன், மருத்துவரணி அருண்குமார், இளைஞர் அணி அமைப்பாளர் அருண் சுந்தர், துணை அமைப்பாளர் ஐ.ரவி, தகவல் தொழில்நுட்பஅணி நிர்வாகிகள் அந்தோணி கண்ணன், அருணாதேவி, அண்ணாதுரை, அஸ்வின் துரை, அயலக அணி கிறிஸ்டோபர் விஜயராஜ், வட்ட செயலாளர்கள் டென்சிங், செல்வராஜ், கங்கா ராஜேஷ், சுரேஷ் மகாராஜன், பால குருசாமி, மூக்கையா, சதீஷ்குமார், அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர்கள் விஜயகுமார், சரவணகுமார், ஜெயசீலி, பவானி, வைதேகி, மார்ஷலின், நாகேஸ்வரி, ஜான்சிராணி, சந்திரபோஸ், தெய்வேந்திரன், மகளிர் தொண்டரணி பெல்லா, மாணவரணி சத்யா, சுற்றுச்சூழல் அணி வினோத், விளையாட்டு மேம்பாட்டு அணி சில்வர்ஸ்டர், நெசவாளர் அணி குமரன் மற்றும் அல்பட், மணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் பகுதியில்

# மறைந்த வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி குரு நினைவு தினம் அனுசரிப்பு



கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் மறைந்த வன்னியர் சங்க தலைவர் காடுவெட்டி குரு நினைவு நாள் அனுசரிப்பு மற்றும் மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

நகரசெயலாளர்வழக்கறிஞர் இளையராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீமுஷ்ணம் கடைவீதியில் மாவீரன் காடுவெட்டி குரு அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். தொடர்ந்து அவருக்கு புகழஞ்சலி செலுத்தபட்டு வன்னியர் சங்கம் மற்றும்கட்சிநிர்வாகிகள் வாழ்த்து கோஷங்களை எழுப்பினர். ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் நடைபெற்றது.

அங்கிருந்து ஊர்வலமாக காடுவெட்டியில் உள்ள குரு நினைவு மணிமண்டபத்திற்கு ஏராளமான நிர்வாகிகள் சென்று மரியாதை செலுத்தினர். நிகழ்வில் மணிவேல், ராமச்சந்திரன், துரை.சிவராமன், அப்பு என்கிற பிரபாகரன், பூவராகமூர்த்தி, ஆட்டோ மணிகண்டன், புருஷோத்தமன், ராஜ்குமார், அஜித், சக்திவேல், பாலமுருகன், குட்டி சிவராமன், வெற்றிவேல் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் ஆய்வு மேற்கொண்டார்



தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி (24.05.2026) அன்று ஈரோடு மாவட்டம், பவானி சாலை, அசோகபுரத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், பள்ளி சீருடைகள், புத்தகப்பை, கணித உபகரணபெட்டி, வண்ண பென்சில் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை வழங்கி வருகின்றது. அந்த வகையில் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி வருகின்ற ஜுன் மாதம் பள்ளிகள் திறக்கப்படவு ள்ளதையொட்டி இன்றைய தினம் அசோகபுரத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான சீருடைகள் பதனிடும் பணியினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையானது 6.7.1973-ல் பதிவு செய்யப்பட்டு 5.9.1973 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாலையில் துணி வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்றபல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆலையின் துணிகள் பதனிடும் திறன் (நாள் ஒன்றுக்கு 1,25,000 மீட்டர்கள் x 26 நாட்கள்) மாதம் ஒன்றிற்கு 32.50 இலட்சம் மீட்டர் ஆகும்.

தமிழ்நாடு அரசின் சீருடை திட்டம் கல்வி ஆண்டு 2026 2027 ன் கீழ் ஆலைக்கு 1.39 கோடி மீட்டர் துணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 1.30 கோடி மீட்டர் கிரே துணிகள் ஆலைக்கு வரப்பெற்று 1.12கோடி மீட்டர் துணிகள் பதனிடப்பட்டுள்ளது. மீதமுள்ள துணிகள் பதனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்துறை அமைச்சர் விஜய் பாலாஜி விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு முகமை நிறுவன ங்களுக்கு அனுப்பி வைக்கப்பட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் இந்த ஆய்வின் போது ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன் , ஆலையின் செயலாட்சியர் சிவகுமார், துணை இயக்குநர் மற்றும் ஈரோடு சரக கைத்தறி உதவி இயக்குநர் பெ.சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தார்கள்.




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.05.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சிறுசேமிப்புத்துறையின் சார்பில் மாவட்டத்தில் கடந்த நிதியாண்டில் சிறுசேமிப்புத் திட்டங்களில் நகராட்சி மற்றும் வட்டாரங்கள் அளவில் சிறப்பாக பணியாற்றி அதிக முதலீடுகளை திரட்டியுள்ள மகளிர் மற்றும் நிலை முகவர்களின் சாதனைப்பணிகளை பாராட்டி கேடயம், அரசின் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றுகள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) விஜய் ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.05.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.

# Key link to Yamuna is missing for Okhla STP



*The Yamuna's most polluted stretch in Delhi continues to struggle with effluent load and environmental flow (e-flow) despite the Okhla sewage treatment plant (STP) being operational, as the crucial link connecting the plant's treated water to the Yamuna – via Abul Fazal drain – is yet to be completed, resulting in discharge of treated water in the Agra canal, officials said.*

*However, a government official said that efforts to improve water quality and the river's e-flow are ongoing as part of the Central government-monitored plan to rejuvenate the Yamuna.*

*"Multiple projects are being considered to improve the e-flow. This includes the release of 563 million liters per day (MLD) from the Okhla plant downstream of the Okhla barrage. The revised deadline for connecting the STP to the Yamuna was February 2026, but the UP irrigation department has yet to complete the work," the official added.-flow refers to the minimum quantity of water required in a river to maintain its ecological health, as it helps dilute pollution levels.Experts and pollution monitoring agencies, such as the Delhi Pollution Control Committee (DPCC) and the environment department, have pegged Yamuna's e-flow requirement at 23 cubic metres per second (cumecs). However, the current average e-flow hovers around 10 cumecs.*



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.05.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.